මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
மැතිවරණ ලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: PRE/2024/61** **2024.09.02**

**சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21**
**அஞ்சல் வாக்கு அடையாளமிடுதல் பற்றிய அறிவித்தல்**

சனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்புக்காக அஞ்சல் வாக்காளர்களுக்கு தமது வாக்கை அடையாளமிடுவதற்கு **2024.09.05, 2024.09.06** ஆகிய தினங்களில் உரிய தொழில் புரியும் இடங்களில் வசதியளிக்குமாறு தெரிவத்தாட்சி அலுவலர்கள் மூலம் அனைத்து அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அஞ்சல் வாக்கு அடையாளமிடும் இடங்களுக்கு பாதுகாப்பளிப்பதற்கும் அவற்றை மேற்பார்வைசெய்வதற்கும் அலுவலர்களை ஈடுபடுத்த நேரிட்டுள்ளமையால், அஞ்சல் வாக்கு அடையாளமிடல் அனைத்து மாவட்ட செயலகங்களிலும் தேர்தல்கள் அலுவலகங்களிலும் **2024.09.04** ஆம் திகதியும், அனைத்து பொலிஸ் விசேட அதிரடிப் படை முகாம்களிலும், பொலிஸ் அலுவலகங்களிலும், பொலிஸ் நிலையங்களிலும் **2024.09.04, 2024.09.06** ஆம் திகதிகளிலும் இடம்பெறவுள்ளது. மேற்குறித்த நாட்களில் தவிர்க்க முடியாத ஒரு காரணத்தினால் வாக்கு அடையாளமிட முடியாமல் போன அஞ்சல் வாக்காளர் ஒருவருக்கு 2024.09.11, 12 ஆகிய இரு தினங்களிலும் **மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி** வரை உரிய அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அலுவலகம் அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்ட செயலகத்தில் அல்லது மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் அதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

02. அஞ்சல் வாக்கு அடையாளமிடப்படும் சந்தர்ப்பத்தைக் கண்காணிப்பதற்காக அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அலுவலகமொன்றுக்கு வேட்பாளர் ஒருவர் சார்பாக முகவர்களாக இருவரும், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL), தேர்தல் வன்செயல் கண்காணிப்பு நிலையம் (CMEV) ஆகிய கண்காணிப்பு நிறுவனங்கள் சார்பாக கண்காணிப்பாளர் ஒருவர் வீதமும் நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக குறித்த அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அலுவலகத்தில் பணிபுரியும் ஆளெவருக்கும் கண்காணிப்பு ஒழுங்கமைப்பொன்று சார்பாக அந்நிறுவனத்தின் அஞ்சல் வாக்கு அடையாளமிடும் இடத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது. மேலும், இந்த இடங்களில் இடம்பெறும் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களினால் உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களும் உதவி அலுவலர்களும் ஈடுபடுத்தப்படுவர். இதுதவிர, அவ்விடங்களில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு உதவுமுகமாக தமது அலுவலகத்தின் அலுவலர்கள் சிலரும் உதவியாளர் ஒருவர் அல்லது இருவர் போன்ற சிறு பிரிவினரும் செயலாற்றுவார்கள்.

03. மேலே பந்தி 02 இல் குறிப்பிடப்பட்டவர்களுக்கும் அஞ்சல் வாக்காளர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளவர்களுக்கும் மாத்திரம் அஞ்சல் வாக்கு அடையாளமிடும் இடமொன்றுக்கு உட்பிரவேசிக்க அனுமதியுண்டு.

04. அஞ்சல் வாக்கு அடையாளமிடப்படுவதையும், அஞ்சல் வாக்கெடுப்பு நிலையங்களையும் அந்த வளவுகளையும் நிழற்படமெடுப்பதும் வீடியோ செய்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

05. குறிப்பாக, கீழ்க்காணும் தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தவறுகளை ஆளெவரும் இவ்விடங்களில் புரிதலாகாது:-

- வாக்கு அடையாளமிட வசதியளிக்கும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அலுவலகம் அமைந்துள்ள வளவில் வேட்பாளரொருவரின் வேட்புரிமையை ஊக்கப்படுத்துவதற்காக அச்சிடப்பட்ட யாதேனுமொரு நிழற்படம், பிரசுரம், சின்னம் அல்லது அடையாளத்தை வெளிக்காட்டக் கூடாது. அதற்காக துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கக் கூடாது.
- அவ்விடங்களில் வாக்குகளை இரந்துகேட்டல் அல்லது வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிக்கக்கூடாதென்று வாக்காளர் ஒருவரைத் தூண்டுதல் ஒரு தவறாகும்.
- அவ்விடங்களில் அல்லது அதற்கு மிக அண்மிய இடத்தில் வாக்கெடுப்புக்கு இடைஞ்சலாக அமையக்கூடிய செயலெதனையும் புரியக் கூடாது.
- வாக்கு அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டொன்றை அல்லது அடையாளமிடப்படாத வாக்குச் சீட்டொன்றை அவ்விடத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்வதற்கு முயற்சிப்பதும் ஒரு தவறாகும்.
- அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டொன்றை ஆளெவருக்கும் காண்பிப்பது தடைசெய்யப்பட்ட ஒரு செயலாகும் என்பதுடன், இரண்டு வருட கால மறியற்றண்டனை விதிக்கப்படத்தக்க ஒரு தவறாகும்.
- அடையாளமிடப்படாத அல்லது அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டொன்றை நிழற்படம் எடுத்தல் அல்லது வீடியோ செய்தல் அல்லது அவ்வாறு பெற்றுக் கொள்ளும் நிழற்படங்களை சமூக ஊடக வலைத்தளங்கள் உள்ளிட்ட எந்த ஓர் ஊடகத்தின் ஊடாகவும் காட்சிப்படுத்துவது முற்றிலும் தடைசெய்யப்பட்டதாகும் என்பதுடன், அவ்வாறு செய்வதற்கு எடுக்கப்படும் முயற்சியும்கூட தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்புகளை மீறுகின்ற செயலாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.
- அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டொன்றைக் காண்பிக்குமாறு அஞ்சல் வாக்காளர் ஒருவருக்கு வற்புறுத்துவதும், அவ்வாறு காண்பிப்பதும் ஒரு தவறாகும்.

06. அஞ்சல் வாக்களிக்கப்படும் இடங்களின் நடவடிக்கைகளை அமைதியான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு பொலிஸாரின் உதவி வழங்கப்படும்.

07. அஞ்சல் வாக்களிக்கும்போது வாக்காளரினால் தமது வாக்கு அடையாளமிடப்பட்டுள்ள விதத்தை எவரும் கண்டுகொள்ள முடியாது என்பதும், அனைத்து அஞ்சல் வாக்கு அடையாளமிடப்படும் நிலையங்களிலும் அஞ்சல் வாக்கை சுதந்திரமாகவும் இரகசியமாகவும் அடையாளமிடுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதும், யாதேனும் அஞ்சல் வாக்கு அடையாளமிடப்படும் இடமொன்றில் வாக்களிப்பதற்கு இடைஞ்சலாக அமையும் அல்லது செல்வாக்கைப் பிரயோகிப்பதற்கு முயற்சி எடுக்கப்படும் பட்சத்தில் குறித்த இடத்தின் வாக்கெடுப்பு இரத்துச் செய்யப்படும் என்பதும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழுவுக்காக)